தலைப்பு 331 - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 331 - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இலக்கம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) தொடர்பாக இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விவரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு இலக்கம் 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம், பொதுத் திறைசேரி மற்றும்

பாராளுமன்றத்தின் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் ' நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான

- கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல்,தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 ஆம் ஆண்டிற்கான நிதியல்லாத சொத்து அறிக்கையின் ஆரம்ப மீதிக்கும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இறுதி மீதிக்கும் இடையே ரூபா. 5,815,071 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	2024 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப மீதி சரியாக சீராக்கப்படாமையால் ஏற்பட்ட இந்த வேறுபாடு சரி செய்யப்படும்.	ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை சரியாகக் கணக்கிட வேண்டும்.

(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிதிப் பிரமாணம் 1645(அ) இன் படி வாகனப் பதிவுப் புத்தகங்கள் பராமரிக்கப்படவில்லை.	ஆவணங்கள் மற்றும் புத்தகங்களைப் புதுப்பித்து பராமரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப் பிரமாணம் 1645(அ) இல் காணப்படும் ஏற்பாடுகளின் படி பொது 267 படிவத்தின் பிரகாரம் வாகனப் பதிவுப் புத்தகங்கள் ஒவ்வொரு வாகனத்திற்கும் பராமரிக்கப்பட வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

கடந்த வருடத்தின் அறிக்கையின் பந்திக்கான தொடர்பு	நடைமுறைப்படுத்தப்படாத பரிந்துரை	இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு
2.3 (அ)	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. திணைக்களத்தின் நிதி நிருவாகத்திற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து பேணிச் செல்ல வேண்டியிருந்தமைக்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அவ்வப்போது மதிப்பீடுகளை மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமை ஆக்கபூர்வமானதாக பேணிச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அந்த மாற்றங்கள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	3.3 (அ)

1.6.1 உ (i) (இ)	செயற்பாடற்ற நிதியங்கள் சட்டத்தின் மேற்கூறப்பட்ட பிரிவின் பிரகாரமும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இல. 2020/1 அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 15(2)(இ) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு முடிவுறுத்தப்படும் நிதியங்களில் இருந்து செலுத்தப்பட உள்ள பணமும் ஏனைய பொறுப்புக்களைத் தீர்த்துவைக்கப்பட்டதை அடுத்து எஞ்சும் பணமும் திரண்ட நிதியத்திற்கு மாற்றப்படுவதற்கும் வெளி நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் முதிர்ச்சியடைந்த உடன் திரண்ட நிதியத்திற்கு மாற்றப்படுவதற்கு அல்லது செயற்படும் நிதியத்தை நியதிச்சட்ட ரீதியாக்கி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்விற்கு உட்படுத்துவதற்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டு 10 வருடங்கள் கடந்திருந்த போதிலும் இயலாதிருந்தது. அதன் பிரகாரம், இதன் மூலம் அரசாங்க நிதி, முறையற்ற பயன்பாட்டிற்குட்பட்டுள்ளதா என்பது குறித்து பரீட்சிக்க முடியாதிருந்ததுடன் இப் பணம் அரசாங்க நிதிக் கட்டுப்பாட்டிலிருந்தும் அப்பாற்பட்டிருந்தது.	3.5 (ஆ)
1.6.1. (இ)(ii)(ஆ)	திணைக்களத்தின் நிதிப் பிரிவின் கீழ் உள்ள ஊழியர் கடன் சுழற்சி நிதித்தின் 2023 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 30,449,227 ஆக இருந்ததுடன் 2020 ஆம் ஆண்டில் இருந்து இந்த சுழற்சி கடன் முன்மொழிவுத் திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்தது. ஊழியர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட தொகையில் ரூபா 186 மில்லியன் தொகை திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருந்தது. சமுர்த்தி அதிகார சபை இருந்த காலத்தில் இருந்தே நிலவிவரும் இந் நிதியத்தில் 2014 ஆம் ஆண்டில் இருந்து 2023 ஆம் ஆண்டு வரை நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	3.5 (ஒ)
2.3	திணைக்களத்தின் கணக்காளரின் மேற்பார்வை இன்றி வங்கி நிதிப் பிரிவின் கீழ் 11 நடைமுறை கணக்குகள் மற்றும் பொது சங்கங்களின் பெயரில் 2 நடைமுறை கணக்குகளும் ஒரு சேமிப்பு கணக்கும் பேணப்பட்டிருந்தது. இந்தக் கணக்குகளில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 42 மில்லியன் ஆகும். நிதிப்பிரமாணம் 381 இன் பிரகாரம் இதில் எந்தவொரு நடைமுறை கணக்கு தொடர்பாகவும் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.	3.9 (ஆ)
5 (அ)	அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்பு நடைமுறை விதிக் கோவையின் பிரகாரம் 97 ஆவது பிரிவின் படி, நியமனங்களுக்குரிய சான்றிதழ்களில் சரியான தன்மை நியமனம் அதிகாரியினால் ஒரு வருடத்திற்குள் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் 59 ஆவது பிரிவின் படி அரசாங்க சேவையின் எந்தவொரு பதவிக்கும் யாரேனுமொரு நபரால் நியமன அதிகாரிக்கு பிழையான தகவல்கள் அல்லது போலியான (பொய்யான) ஆவணங்கள்	6(அ)

சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை கண்டறியப்படுமிடத்து அந் நியமனம் உடனடியாக இரத்துச் செய்யப்பட்டு வலுவற்றதாக்கி செல்லுபடியற்றதாக்கப்படும். அதுவரை சம்பளம் மற்றும் படிகளாக அரசாங்கத்தால் செலுத்தப்பட்ட சகல பணமும் அவ் உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும் 363 உத்தியோகத்தர்களால் தமது நியமனத்தைப் பெற்றுக்கொள்வதற்காக தனியாள் கோவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த கல்விச் சான்றிதழ்கள் போலியான சான்றிதழ்கள் என உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதில் 77 பேர் சேவையிலிருந்து நீக்கப்பட்டிருந்ததுடன் 20 பேர் சட்டத்தின் பிரகாரம் இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ளும் இணக்கப்பாட்டுடன் சேவையிலிருந்து விலகிச் சென்றிருந்தனர். தெரிவுக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கடமையாற்றி, ஓய்வூதியமின்றி சேவையை முடிவுறுத்தியிருந்த

உத்தியோகத்தர்களுக்கும் தற்போது சேவையில் உள்ள 30 உத்தியோகத்தர்களுக்கும் நியமனத் திகதியிலிருந்து ரூபா 195,215,660 தொகையும், மொனராகலை மாவட்டத்தில் 04 பிரதேச செயலகங்களில் 04 உத்தியோகத்தர்களுக்காக 1999 ஆம் ஆண்டு முதல் ரூபா 40,383,176 தொகையும் கொழும்பு மற்றும் மாத்தறை மாவட்டங்களில் 17 உத்தியோகத்தர்களுக்காக 2023 ஆம் ஆண்டிற்காக மாத்திரம் ரூபா 8,732,204 தொகையும் சம்பளமாகவும் படிப்பணமாகவும் செலுத்தப்பட்டிருந்த போதிலும் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	செலவினங்களுக்கான சரியான மதிப்பீடுகளைத் தயாரிக்கத் தவறியதால், 02 செலவின விடயங்களுக்கான ரூபா. 2,995,000 தொகையான மொத்த ஒதுக்கீடும் எஞ்சியிருந்தது.	திட்டமிடப்பட்ட கொள்முதல் நடவடிக்கைகளுக்குத் தேவை யான ஒப்புதல்களைப் பெறுவதற்கான காலம் கணக்குகளைத் தீர்க்கும் காலத்திற்கு அண்மித்திருந்த மையால், செலவினத்தை மேற்கொள்ளமுடியவில்லை.	ஒதுக்கீடுகளை உச்ச அளவில் பயன்படுத்த வேண்டும்.
(ஆ)	கொரிய உதவியுடன் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங் களுக்கு விநியோகிப்பதற்காக துறைமுகத்திலிருந்து துணி களையும் பொருட்களையும் விடுவிப்பதற்காக 331-2-2-2509/17 செலவின விடயத்தின் கீழ் மதிப்பீட்டில் ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டிராததுடன் நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் ரூபா	பொருட்களை விடுவிப்பதற்குத் தேவையான சில அங்கீகாரங்கள் 31 திசெம்பர் 2024 இல் உள்ளவாறு கிடைக்கப் பெற்றிருக்கவில்லை.	தேவைக்கேற்ப மட்டுமே நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

	9,525,865 மாற்றப்பட்டிருந்த போதிலும் அந்த ஒதுக்கீடுகள் முற்றாக சேமிக்கப்பட்டிருந்தன.		
(இ)	எதிர்பார்க்கப்பட்ட செலவினம் மேற்கொள்ளப்பட்டிராமை, ஒதுக்கீடுகள் பயன்படுத்தப் பட்டிராமையின் காரணமாக 06 செலவின விடயங்களுக்கான ரூபா. 7,700,000 தொகையான மொத்த ஒதுக்கீட்டில் ரூபா. 5,544,431 தொகை எஞ்சியிருந்தது. இது ஒரு சதவீதமாக 50 சதவீதம் முதல் 91 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது.	ஒதுக்கீடுகள் குறைவாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்குத் தேவையான உள்ளக ஏற்பாடுகள் இது வரையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.	ஒதுக்கீடுகள் உச்ச அளவில் பயன்படுத்தப் பட வேண்டும்.

3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படுதல்

கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வருடத்திற்கு உரித்தான பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளாக SA - 92 இன் படி, ரூபா 11,531,005 பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டிற்கான பொறுப்புகளாகக் காணப்பட்ட 2024 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 11,491,078 பொறுப்புகளாகப் பதிவு செய்யப்பட்டமையால், மீளாய்வாண்டின் பொறுப்புகள் அந்தப் பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.	2024 ஆம் ஆண்டிற்கான பொறுப்புகள் அறிக்கை, Cigas கணினி மென்பொருள் மூலம் தயாரிக்கப்படுகையில் 2023 ஆம் ஆண்டிற்கான பொறுப்புகளுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்தகைய குறைபாடுகளைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.	பொறுப்புகளை சரியாகக் கணக்கிட வேண்டும்.

3.3 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

	கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	திணைக்களத்தின் நிதி நிருவாகத்திற்காக ஆக்கபூர்வமான உள்ளகக்	இந்த அறிக்கையிடலுக்கான பரிந்துரைக்கப்பட்ட வடிவம் ஒன்று இன்மையால், கடந்த	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின்

	கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து பேணிச் செல்ல வேண்டியிருந்தமைக்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அவ்வப்போது மதிப்பீடுகளை மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமை ஆக்கபூர்வமானதாக பேணிச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அந்த மாற்றங்கள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	சில ஆண்டுகளாக இந்த அறிக்கையை சமர்ப்பிக்க முடியவில்லை. 2025 ஆம் ஆண்டில் பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தின் படி அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.	38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	உள்ளகக் கணக்காய்வு பணிகளை உரிய முறையில் செயற்படுத்துவதற்குகாக செயற்திறனான நடைமுறையொன்று உள்ளதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், அறிக்கையின் 5.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்பின் பிரகாரம் அத்தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	உள்ளகக் கணக்காய்வு பணிகளில் உள்ள குறைபாடுளை இனங்கண்டு அக் குறைபாடுகளை கூடியளவில் சீராக்கி 2024 ஆம் ஆண்டின் போது செயற்படுத்தப்பட்டது. 2025 ஆம் ஆண்டின் போது கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் செயற்பட்டு உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.	- மேற்படி -

3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	அவதானிப்பு பெறுமதி ரூபா	இணங்காமை	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்				
(i)	நிதிப் பிரமாணம் 880	-	வங்கித் துறையில் பணத்தை வசூலிக்கும் கடமைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள், பணச் சேகரிப்பு கவுண்டர்களிலும் காசோலைகளில் கையொப்பமிடும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளாலும் பண பிணை வைப்பு கட்டளைச் சட்டத்தின் படி பிணை வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும், தெரிவுக் கணக்காய்விற்கு உட்பட்ட தங்காலை, மெதமுலன, வீரவில மற்றும் கோனதெனியா பகுதியில் உள்ள சமுர்த்தி சமூக வங்கிகளின் வங்கி முகாமையாளர்கள், கணக்கு எழுதுவினைஞர்கள், காசாளர் மற்றும் களக் கடன் வசூலில் ஈடுபடும் அதிகாரிகளால் பிணை வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.	பிணைக் கட்டளைச் சட்டப் பிரமாணங்களின் படி பிணை வைக்கப்பட வேண்டிய சகல அதிகாரிகளினதும் பிணை வைப்பை மேற்கொள்வதற்கு சகல மாவட்டப் பணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.	நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii)	நிதிப் பிரமாணம் 1647 (அ)	-	அரச திணைக்களங்களில் சொத்துக்கள் ஆண்டுதோறும் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் திணைக்கள வாகனங்கள்	2024 ஆம் ஆண்டிற்கு உரித்தான வாகன மெய்மையாய்வு அறிக்கை 2025 ஆம் ஆண்டு	- மேற்படி -

			தொடர்பாக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	யூன் 30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	-
(ஆ)	09/2009 ஆம் இலக்க மற்றும் 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை	-	அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகளின் வருகை மற்றும் வெளிச்செல்கை கைரேகை இயந்திரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் தெரிவுக் கணக்காய்வின் படி செவனப்பிட்டிய மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் உள்ள அனைத்து சமுர்த்தி சமூக வங்கிகளும் கைரேகை இயந்திரங்களைப் பயன்படுத்தியிருக்கவில்லை. மேலும் இது தொடர்பாக அதிகாரிகளால் முறையான மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. குறித்த சுற்றறிக்கையின் படி, மேலதிக நேரக் கொடுப்பனவுகளுக்கும் விடுமுறை சம்பளக் கொடுப்பனவுகளுக்குமாக கைரேகை இயந்திரத் தரவு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் மாவட்டத்தில் உள்ள சமுர்த்தி சமூக வங்கிகளில் மேலதிக நேரக் கொடுப்பனவுகளும் விடுமுறை சம்பளக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டிருந்த போதிலும் கைரேகை இயந்திரங்களைப் பயன்படுத்தாதிருந்தமை உள்ளகக் கட்டுப்பாட்டில் ஒரு பலவீனம் என்பது அவதானிக்கப்பட்டது.	கைரேகை இயந்திரங்கள் ஸ்தாபிக்கப்பட்டதை அடுத்து மேலதிக நேரக் கொடுப்பனவுகளும் விடுமுறை சம்பளக் கொடுப்பனவுகளும் செலுத்தப்படுகையில் அவ் அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக.	சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	திவி நெகும சட்டத்தின் 44 (ஆ) பிரிவின் பிரகாரம் இரத்துச் செய்யப்பட்ட சட்டங்களின் கீழ் நிறுவப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரசபை, தெற்கு அபிவிருத்தி அதிகாரசபை, உடரட்ட அபிவிருத்தி அதிகாரசபை போன்ற அதிகாரசபைகளுக்கு உரித்தான அனைத்து அசையா மற்றும் அசையும் சொத்துக்களையும் அரசாங்கத்திற்கு ஒப்படைக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, மேற்குறித்த நிறுவனங்களின் நிலையான சொத்துக்கள் சமுர்த்தி திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டு, மேற்கண்ட நிதிகளின் மீதிகளும் திணைக்களத்தால கையகப்படுத்தப்பட்டு நிலையான வைப்புகளாக இதுவரை திணைக்கள வங்கி நிதிப் பிரிவின் கீழ் வைப்பாகப் பேணப்பட்டிருந்தது. இந் நிதி தொடர்பாக திணைக்களத்தின் வருடாந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதற்கு இயலாதிருந்ததுடன் இவ் நிதியங்கள் எதற்கும் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2025 மே 14 ஆம் திகதி நிதி அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் சமுர்த்தி சட்டத்தின் படி, இத் திணைக்கள நிதியம் நியதிச் சட்டத்திற்கு உட்பட்டதா என்பது குறித்து சட்டமா அதிபரிடம் கோரப்பட்டு ஓர் அறிக்கையைப் பெற்று இதன் படி எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களிற்கு அமைவாக சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்படுவதற்காக 2025 மே 16 ஆம் திகதி குறித்த பதிவேடு சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக.	சகல நிதியங்களும் சட்டரீதியாக்கப்பட்டு கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்கும் வகையில் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் வேண்டும்.
(ஆ)	செயற்பாடற்ற நிதியங்கள் 2024 இன் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவச் சட்டத்தின் 39 (4) ஆம் பிரிவின் பிரகாரமும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இல. 2020/1 அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 15(2)(இ) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு முடிவுறுத்தப்படும் நிதியங்களில் இருந்து செலுத்தப்பட உள்ள பணமும் ஏனைய பொறுப்புக்களைத்	- மேற்படி -	செயற்பாடற்ற நிதியங்கள் தொடர்பாக சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன் செயற்படும் நிதியம் அரச நிதிக் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட வேண்டும்.

	தீர்த்துவைக்கப்பட்டதை அடுத்து எஞ்சும் பணமும் திரண்ட நிதியத்திற்கு மாற்றப்படுவதற்கும் வெளி நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் முதிர்ச்சியடைந்த உடன் திரண்ட நிதியத்திற்கு மாற்றப்படுவதற்கு அல்லது செயற்படும் நிதியத்தை நியதிச்சட்ட ரீதியாக்கி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்விற்கு உட்படுத்துவதற்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டு 10 வருடங்கள் கடந்திருந்த போதிலும் இயலாதிருந்தது. அதன் பிரகாரம், இதன் மூலம் அரசாங்க நிதி, முறையற்ற பயன்பாட்டிற்குட்பட்டுள்ளதா என்பது குறித்து பரீட்சிக்க முடியாதிருந்ததுடன் இப் பணம் அரசாங்க நிதிக் கட்டுப்பாட்டிலிருந்தும் அப்பாற்பட்டிருந்தது.		
(இ)	2017 மார்ச் 07 ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி யின் 6 (உ) பிரிவின் பிரகாரம் மீள் காப்பீட்டாளராகச் செயற்படுவதற்கான அதிகாரம் பெற்றிருந்த போதிலும் அரசாங்க நிறுவனங்கள், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட காப்புறுதி சேவை வழங்குனர்களிடமிருந்தோ அல்லது அவர்களின் முகவர்கள்/தரகர்களிடமிருந்தோ பெறுகை வழிகாட்டுதல்களின் கீழ் போட்டி விலைக் கோரல்களின் மூலம் வழமையான காப்பீட்டைப் பெறுக்கொள்ள வேண்டிய போதிலும் முகாமைத்துவ சபையால் பல்வேறு சந்தர்ப்பங்களில் காப்பீட்டுத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட	1995 இன் 30 ஆம் இலக்க இலங்கை சமுர்த்தி அதிகாரசபைச் சட்டத்தின் படி, சமுர்த்தி அதிகாரசபையின் கீழ் நிறுவப்பட்ட சமுர்த்தி வங்கிகளின் செயற்பாட்டின் போது ஏற்பட்ட கடன் இடர் நிலைகளுக்குத் தீர்வாக, முன்னாள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் உள்ளகக் காப்புறுதித் திட்டமாக காப்புறுதித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதாகவும் பொதுச் சங்கத்திற்கு மீள்காப்பீட்டாளரைச் செயற்படுத்துவதற்கு வர்த்தமானி மூலம் அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு செயற்படுவதற்கு மீள் காப்பீட்டின் போது காப்புறுதி செய்யப்படும் சொத்துக்கள் மீள் காப்பீடு செய்யப்பட்ட வேண்டும். மேலும், அவ்வாறு செய்வதற்கு பொது சங்கத்திடம் நிதிச் சொத்துக்கள் இல்லாதிருந்ததுடன் எதிர்காலத்தில், இந்தப் பணம் பொது சங்கத்திற்கு	காப்புறுதி நடவடிக்கைகள் அதிகாரச்சட்டத்தின் படியும் தற்போதைய சட்டங்கள், விதிகளின் பிரகாரம் அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும்.

	சுற்றறிக்கைகள் பின்பற்றப்படாது வெளிப்படைத்தன்மை இன்றி காப்பீட்டுக் கொள்கைகளுக்கு முரணாக குறித்த காப்புறுதித் திட்டம் செயற்படுத்தப்பட்டு நட்டஈட்டுக் கொடுப்பனவும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	மாற்றப்பட்டதை அடுத்து அதன் படி செயற்படுவதாக.	
(ஈ)	2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் I ஆம் பகுதியின் 15 (3) ஆம் பந்தியின் படி, நியதிச்சட்டத்திற்குட்படாத நிதியங்கள் உடனடியாக அமலுக்கு வரும் வகையில் இரத்து செய்யப்பட்டு, அவற்றின் நிதிய மீதி திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். இருப்பினும், நியதிச்சட்டத்திற்குட்படாத நிதியத்தைத் தொடர்ந்து பராமரிப்பதற்கு நியாயமான காரணங்கள் இருப்பின் ஏற்கனவே உள்ள நிதியத்தை பாராளுமன்ற அதிகாரச்சட்டத்தின் மூலம் சட்டப்பூர்வமாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும், 2024 இன் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவச் சட்டத்தின் 39(4) ஆம் பிரிவின் படி அதிகாரச்சட்டம் அமுலாக்கப்பட்ட திகதி முதல் ஏதேனும் நியதிச்சட்டமற்ற நிதியத்தின் செயற்பாட்டை முடிவுறுத்த வேண்டியதுடன் இவ் அதிகாரச்சட்டம் செயற்படுத்தப்பட்ட நாள் முதல் ஒரு வருடத்திற்குள் அந் நிதியம் கலைக்கப்பட வேண்டும். எனினும், திணைக்களத்தின் மூலம் பேணப்பட்ட காப்புறுதி நிதியம் தொடர்பான சுற்றறிக்கையின் படி செயற்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.	2025 மே 14 ஆம் திகதிய நிதி அமைச்சில் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் போது, சமுர்த்தி அதிகாரச்சட்டத்தின் படி இத் திணைக்களத்தின் நிதியம் நியதிச்சட்டபூர்வமானதா என்பது குறித்து சட்டமா அதிபரிடம் ஆலோசனையில் ஓர் அறிக்கை பெறப்பட்டு அதன் படி எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வழங்கப்பட்ட ஆலோசனைக்கமைய சட்டமா அதிபரிடம் ஆலோசனைக்காக தொடர்புடைய ஆவணங்கள் 2025 மே 16 அன்று சட்டமா அதிபருக்கு ஆலோசனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக.	அதிகாரச்சட்டத்தின் படியும் சுற்றறிக்கையின் படியும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(உ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமுர்த்தி பயனாளிகளின் மானியத் தொகையில் இருந்து கட்டாய சேமிப்பாகப் பிடித்து வைக்கப்பட்டு வங்கி நிதிப் பிரிவிடம் ரூபா 30,356.57 மில்லியன் கட்டாய சேமிப்புத் தொகை உள்ளதுடன் இத் தொகையில் ரூபா 29.51 மில்லியன் இனங்காணப்படாத கட்டாய சேமிப்புத் தொகையாகக் காணப்பட்டது. இச் சகல பணத் தொகையும் முதலீடாக வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அத் தொகை ரூபா 44,382.63 மில்லியனாகும். 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு முதலீட்டு வட்டித் தொகை ரூபா 4,461.47 மில்லியனாகக் காணப்பட்டது. வங்கி நிதிப் பிரிவால் 2024 ஆம் ஆண்டில் கட்டாய சேமிப்புப் பணத்தை முதலீடு செய்திருந்த போதிலும், வங்கிகளுக்கு 1 சதவீத குறைந்த வட்டி விகிதத்திலேயே வழங்கப் பட்டிருந்தது. இருப்பினும், 2024/133/01 முகாமைத்துவத் தீர்மானத்தின் படி, 3.6 சதவீதமாகும். இதன் படி கட்டாய சேமிப்புத் தொகை நேரடியாக வங்கியில் வைப்பிலிடுவதற்குப் பதிலாக வங்கியின் நிதிப் பிரிவில் தக்கவைத்து முதலீடு செய்வதன் மூலம், சமூகசார் வங்கியால் முதலீடு செய்வதன் மூலம் ஈட்டக்கூடிய வட்டி வருமானத்தைப் பார்க்கிலும் குறைவான வட்டியைக் கொண்டிருந்தமையும் அத் தொகை மக்களின் வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கை களுக்காக கடனுக்கு வழங்க் கூடிய இயலுமையை குறைத்திருந்தது.	பயனாளிகளுக்கு தற்போது அதிக வட்டியைச் செலுத்த முடிந்துள்ளது. அதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக.	கட்டாய சேமிப்பு பணத்தைப் பயனாளிகளின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும்.
(ஊ)	மீளாய்வாண்டின் போது திணைக்களத்தில் உள்ள பொதுச் சங்கம் 2017 மார்ச் 07 ஆம் திகதிய 2009/8 ஆம்	2017 மார்ச் 07 ஆம் திகதிய 2009/8 ஆம் இலக்க வர்த்தமானியின் படி 2017 ஆகஸ்ட் மாதம் முதலாவது	2017 மார்ச் 07 ஆம் திகதிய 2009/8 ஆம் இலக்க வர்த்தமானியின் படி

	இலக்க வர்த்தமானியின் 5 ஆம் அத்தியாயத்தின் (இ) பிரிவின் படி நிறுவப்பட்டிராததுடன் அதற்காக ஒதுக்கப்பட்ட ஓர் நிதியத்தைப் பேணியிருந்தது. மேலும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந் நிதியத்திலான முதலீடு ரூபா 9 மில்லியன் ஆகும்.	பொதுச் சபைக் கூட்டம் நடாத்தப்பட்டு பொதுச் சங்கம் நிறுவப்பட்டதாக.	சரியான அமைப்பில் பொதுச் சங்கத்தை ஸ்தாபித்துக்கொள்ள வேண்டும்.
(எ)	2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 2020/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியின் நிதிப் பிரமாணம் 877 (1) (இ) மற்றும் (ஈ) பந்தியின் படி, ஒரு நிதியத்தின் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்து அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்துடன் திறைசேரி அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். மேலும், அவ்வாறு வரவுசெலவுத் திட்ட அங்கீகாரம் பெறப்படாது நிதியத்தின் கீழ் எந்தச் செலவினத்தையும் செய்ய இயலாத போதிலும் திணைக்களத்தின் கீழ் உள்ள வங்கி நிதிப் பிரிவிடம் உள்ள நிதியத்திலிருந்து எந்தவித அங்கீகாரமும் இன்றி செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருடாந்த செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி, 2024 ஆம் ஆண்டிற்காக ரூபா 3745.9 மில்லியன் செலவின மதிப்பீடு மட்டுமே தயாரிக்கப்பட்டு, அந்தச் செலவுகளை மேற்கொள்வதற்காக வருமானத்தை ஈட்டும் முறை, அதாவது, ஆண்டிற்கான வருமானம் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. அதன்படி, அத்தகைய அங்கீகாரம் இன்றி மேற்கொள்ளப்படும் அனைத்து செலவுகளும் சட்டபூர்வமற்றவையாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.	சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் படி திறைசேரி அங்கீகாரத் திற்காக சமர்ப்பிப்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடி அது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக.	சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஏ)	வருடாந்தம் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டுப் பதிவேட்டை அடிப்படையாகக் கொண்டு பெறுகைத் திட்டத்தைத் தயாரித்து பெறுகையை மேற்கொள்ள வேண்டிய போதிலும் சமூச சார் வங்கிப் பிரிவு அதன் படி செயற்பட்டிராததுடன் 2024 ஆம் ஆண்டிற்காக ரூபா 477 மில்லியன் பெறுமதியான பெறுகைக்காக மாத்திரமே பெறுகைத் திட்டத்தைத் தயாரித்திருந்தது. சமுர்த்தி வங்கிக்காக ரூபா 460 மில்லியன் பெறுமதியான கைரேகை இயந்திரங்களைக் கொள்வனவு செய்தமை, மின்பிறப்பாக்கிகளைக் கொள்வனவு செய்தமை மற்றும் சூரிய பேனல்களை வழங்குதல் போன்ற பெறுகைகளுக்காக பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்படாது பெறுகைத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருந்தது.	இதுவரையில் 38 மின்பிறப்பாக்கிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.	சகல கொள்வனவுகளும் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஐ)	திணைக்களத்தின் கீழ் உள்ள சமூகசார் வங்கிகள், மாவட்ட அலுவலகங்கள் மற்றும் வங்கி நிதிப் பிரிவின் பதவியணியின் ஊழியர்களுக்கு, தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்திற்கு மாறாக, ஊழியர் நுகர்வோர் கடன்கள், ஊழியர் வீட்டுவசதி கடன்கள், விசேட ஊழியர் கடன்கள் மற்றும் விசேட இடர் போன்ற ஊழியர் கடன் திட்டங்களின் கீழ் கடன்கள் வழங்கப்பட்டு 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 12.9 பில்லியன் தொகை (நிலுவையான மீதி) அறவிடப்பட வேண்டியிருந்தது. இந்த ஊழியர் கடன்களில், ரூபா 45.72 மில்லியன் தொகை 2025 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையில் கடனைத் திருப்பிச் செலுத்தாததன் காரணமாக அந்தப் பணத்தை வசூலிப்பதற்கான நடவடிக்கை எடுக்காது அறவிடமுடியாக் கடன்களாக ஒதுக்கப்பட்டிருந்தது.	தற்போது, இந்த ஊழியர் கடன்கள் வழங்கப்படுவது இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் கடன் தவணைப்பண அறவீடுகள் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றன. 2025 பெப்ரவரி வரையில் அறவிடமுடியாக் கடன் தொகை ரூபா 45.724 மில்லியன் ஆகும். இந்தக் கடனை அறவிடுவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் கடன்பெற்றவர்களும் பிணை வழங்கியவர்களும் சேவையை விட்டு விலகிச்சென்றுள்ளமை, ஒழுக்காற்று நடவடிக்கைகள் காரணமாக சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளமை போன்ற காரணங்கள் அறவிடமுடியாக் கடன்கள் ஏற்படக் காரணமாகியிருந்தன.	அரச அதிகாரிகளுக்கு நிதியைப் பயன்படுத்தி தாபன விதிக்கோவைக்கும் தற்போதுள்ள சட்டவிதிகளுக்கும் முரணான வகையில் ஊழியர் கடன்களை வழங்க முடியாது என்பதால், தற்போது அறவிடப்பட முடியாத நிலுவைகளுக்கு அரச கணக்குகள் சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஒ)	திணைக்களத்தின் நிதிப் பிரிவின் கீழ் உள்ள ஊழியர் கடன் சுழல் நிதியத்தில் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 49,962,589 ஆகும். மேலும் 2020 ஆம் ஆண்டு முதல் இச் சுழற்சி கடன் திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.ஊழியர் களிடமிருந்து சேகரிக்கப்பட்ட பணத்தில், ரூபா 186 மில்லியன் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப் பட்டிருந்தது. சமுர்த்தி அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்ட காலத்திலிருந்து நிலவி வரும் இந் நிதியத்தில் 2014 முதல் 2024 ஆம் ஆண்டு வரை நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30, ஆம் திகதியில் உள்ளவாறு அனைத்து நிதிக்கூற்று அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டு நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன் பின்னர் , கணக்கில் உள்ள அனைத்து கடன் நிலுவைகளையும் முற்பண பீ கணக்கிற்கு மாற்றப்பட்டு ஊழியர் கடன் சுழல் நிதிக் கணக்கை முடக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	நிதிக்கூற்று அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.
(ஓ)	சமுர்த்தி பயனாளிகளின் கட்டாய சேமிப்புக் கணக்குகளில் உள்ள பணத்திலிருந்தும் பல்வேறு நோக்கங்களுக்காக நிறுவப்பட்ட திணைக்களத்தில் உள்ள நிதியக் கணக்குகளிலிருந்தும் ரூபா 53.6 பில்லியன் அரசாங்கத்தின் பல்வேறு தேவைகளுக்காக வழங்கப்பட்டிருந்தது. 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரியிலிருந்து மேலும் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 2.7 பில்லியன் ஆகும்.	2013 ஆம் ஆண்டில் அப்போதைய சமுர்த்தி ஆணையர் நாயகம் திணைக்களத்திடமிருந்து சமுர்த்தி மானியங்களை செலுத்துவதற்காக பெற்றிருந்த பணத்தில் இருந்து மேலும் தீர்க்க வேண்டியதாக திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் நிலவிய ரூபா 2,374 மில்லியன் தொகையை திறைசேரியில் மீளளிப்புச் செய்வதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இறுதியாக 2025 ஏப்ரல் 03 ஆம் திகதி அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டு அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டதாக.	அறவிடப்பட வேண்டிய மீதியைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஔ)	பொதுச் சங்க நிதியப் பணிப்பாளர் நாயகத்தால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் வைப்புச் செய்ய இயலுமான போதிலும் இதற்கு மாறாக, வங்கி நிதிப் பிரிவால் 2004 ஆம் ஆண்டில் தனியார் வங்கி ஒன்றில் ரூபா 10 பெறுமதியான 5,557,188 பங்குகளை ரூபா 14.50 படி கொள்வனவு செய்வதற்கு ரூபா 80,579,226 செலவிடப்பட்டிருந்தது.	சமுர்த்தி சமூக வங்கிகள் மற்றும் சங்க முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தில் நியமிக்கப்பட்ட முதலீட்டுக் குழுவின் மூலம் தரகு நிறுவனத்தின் சேவைகளைப் பெற்று பங்கொன்றின் பெறுமதி ரூபா 40.00 இற்கு மேற்பட்டதை அடுத்து திறைசேரியின் அங்கீகாரத்தில் விற்பனை செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக.	முதலீட்டை சரியான அங்கீகாரத்தை அடுத்து மேற்கொள்ள வேண்டும்.

3.6 மோசடித் தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2019 முதல் 2024 திசெம்பர் 31 வரையிலான காலப் பகுதிக்கு உரித்தாக திணைக்களத்தின் புலனாய்வுப் பிரிவிற்கு ரூபா 243.52 மில்லியன் மதிப்புள்ள 252 நிதி மோசடிகள் புகாரளிக்கப் பட்டுள்ளதுடன் அவற்றில் 138 மோசடிகளுக்கு உரித்தான 138 அதிகாரிகளின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு, தொடர்புடைய மோசடிகள் மூலம் மீட்கப்பட்ட தொகை ரூபா 52.91 மில்லியன் ஆகும். மேலும், ரூபா 190.61 மில்லியன் பெறுமதியான 114 நிதி மோசடிகளுக்கு ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் 2014 ஜனவரி 03 முதல் 2018 ஆகஸ்ட் 31 வரை வங்கிகளிலும் வங்கி சங்கங்களிலும் நேர்ந்த நிதி முறைகேடுகளில் இருந்து ரூபா 75.40 மில்லியன் மதிப்புள்ள 9 முறைகேடுகளின் நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப் பட்டிருக்கவில்லை. ஆதிகாரி களால் தொடர்ந்து இதுபோன்ற நிதி மோசடிகளைச் செய்வதற்கு வங்கி முறைமையில் நிலவும் குறைபாடுகள் மற்றும் ஒழுக்காற்கு உத்தரவுகளின் மூலமான தண்டனைகள் தளர்வானதும் மோசடிகள் அதிகரிப்பதற்குக் காரணமாயிருந்தன.	நேர்ந்த நிதி மோசடிகள் கண்டறிந்ததை அடுத்து, எதிர்காலத்தில் இதுபோன்ற சூழ்நிலைகள் ஏற்படுவதைக் குறைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளை வலுப்படுத்தி செயற்பாட்டு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அந்த அறிவுறுத்தல்களின் படி செயற்படுவதாக வங்கிகளும் வங்கிச் சங்கங்களும் கண்காணிக்கப்படுவதற்கு மாவட்ட மட்டத்தில் வங்கி கண்காணிப்பு அதிகாரிகளுக்கு பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளன. வங்கிப் பிரிவின் நிதித் துறைக் கண்காணிப்புப் பிரிவின் அதிகாரிகளின் கண்காணிப்புப் பிரிவு அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் தலைமைக் காரியாலயத்தில் கண்காணிப்பிற்கு இச் செயற்பாடு உட்படுத்தப்பட்டுள்ளதாக.	நிதி மோசடிகள் ஏற்படாதவாறு வங்கி அமைப்பில் உள்ள குறைபாடுகள் சரி செய்யப்பட்டு, அமைப்பை வலுப்படுத்த வேண்டும்.
(ஆ)	தாபன விதிக்கோவையின் II ஆம் பகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 13.2 ஆம் பிரிவிற்கமைய 2019 செப்தெம்பர் 30 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை 30/2019 இன் மூலம் பூர்வாங்க விசாரணைகள் 2	சமுர்த்தி சமூக நிதி வங்கிகளில் கண்டறியப்பட்ட நிதி மோசடிகள் தொடர்பாக நடாத்தப்பட்ட பூர்வாங்க விசாரணைகளிலான சிக்கலான தன்மை காரணமாக அதற்காக நீண்ட காலம் எடுப்பதாக.	தாபன விதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் மோசடி, ஊழல் மற்றும் முறைகேடுகள் தொடர்பாக பூர்வாங்க விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டு ஒழுக்காற்றுக் கட்டளைகள் வழங்குவதில் 2 முதல் 10 ஆண்டுகள் வரை தாமதங்கள் ஏற்பட்டடிருந்தன.		
(இ)	எலஹெர சமுர்த்தி சமூக வங்கியில் இடம்பெற்ற நிதி முறைகேடுகள் தொடர்பாக சரியான ஒழுக்காற்று நடைமுறைகள் செயற்படுத்தப்படாது தவறியைத்த நபர் ஒழுக்காற்று தண்டனைகளுக்கு உட்பட்டு சேவையில் அமர்த்தப்பட்ட மூன்று அதிகாரிகளை செவனப்பிட்டிய சமுர்த்தி சமூக வங்கிக்கு இடமாற்றம் செய்து ஒருவருக்கு உயர் பதவி வழங்கியிருந்தமை நலிவான உள்ளகக் கட்டுப்பாட்டு நடவடிக்கையாகும் எனவும் இது எதிர்காலத்தில் நேரும் நிதி முறைகேடுகளின் கட்டுப்பாட்டிற்கு ஒரு சிக்கலாக இருக்கும் என்பதுவும் அவதானிக்கப்பட்டது.	2011 ஆம் ஆண்டு முறைகேடுகள் தொடர்பாக ஒழுக்காற்று உத்தரவுகளின் கீழ் சேவையில் அமர்த்தப்பட்ட அதிகாரிகளில் இருவர் வெலிகந்த பிரதேச செயலகப் பிரிவிற்கு நியமிக்கப்பட்டதை அடுத்து செவனப்பிட்டிய வங்கி வலயத்தில் களப் பணிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். மாவட்டச் செயலாளருடன் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையைத் தொடர்ந்து, 2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற சம்பவத்தை அடுத்து சேவைக் காலம் சரிபார்க்கப்பட்டு, தகைமை அடிப்படையில் உயர் பதவி வழங்கப்பட்டுள்ளதாக.	நிதி முறைகேடுகளை மேற்கொண்ட அதிகாரிகளுக்கு ஒழுக்காற்றுத் தண்டனை வழங்கப்பட வேண்டும்.

3.7 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவுகள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 62 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதியின் மொத்தத் தொகை ரூபா 2,177,121 ஆகும். இது 1 முதல் 20 வருடங்களுக்கும் மேலாக நிலுவையாகக் காணப்பட்டது. இந்தக் கடன் மீதியில், 5 முதல் 10 வருடங்களுக்கு இடையிலான நிலுவைத் தொகை மீதி ரூபா 630,731 ஆகவும், 10-20	மேலும் தீர்க்க வேண்டிய நிலுவைத் தொகைகளை அடையாளம் காண நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.	சுற்றறிக்கையில் உள்ள வழிகாட்டுதல்களின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வருடங்களுக்கு இடையிலான மீதி ரூபா 140,120 ஆகவும் 20 வருடங்களுக்கு மேலான நிலுவைத் தொகை ரூபா 162,402 ஆகவும் இருந்தது. இது தொடர்பாக, 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை 01/2020 வழிகாட்டல் இல.01 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.8 வைப்பு மீதிகள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
பொது வைப்பு கணக்கின் காலப் பகுப்பாய்வு அறிக்கைகளின் படி, 2024 ஆம் ஆண்டிற்காக தலைமை அலுவலகத்திலும் மாவட்ட அலுவலகங்களிலும் 04 வகையான வைப்புத் தொகைகள் பேணப்பட்டு வருவதுடன் அதனுடன் தொடர்புடைய தீர்க்கப்படாத வைப்பு மீதி ரூபா 2,387,236,132 ஆகக் காணப்பட்டது. இதில், 1-2 வருடங்களுக்கு இடையிலான மீதி ரூபா 2,033,468 ஆகவும் 2-5 வருடங்களுக்கு இடையிலான மீதி ரூபா 3,912,260 ஆகவும் 5 வருடங்களுக்கு மேலான மீதி ரூபா 2,375,752,987 ஆகவும் காணப்பட்டது.	சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தில் இருந்து சமுர்த்தி மானியங்களை செலுத்துவதற்காக பெறப்பட்ட தொகையிலிருந்து மேலும் தீர்க்கப்பட வேண்டிய, திணைக்களத்தின் பொது வைப்பு கணக்கில் உள்ள ரூபா 2,374 மில்லியன் தொகையை திறைசேரிக்கு திருப்பிச் செலுத்துவதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இறுதியாக 2025 ஏப்ரல் 03 ஆம் திகதி அன்று அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று தயாரிக்கப்பட்டு அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக.	ரூபா 2374 மில்லியன் தொகை திணைக்களத்தின் கீழ் உள்ள வங்கி நிதிப் பிரிவிற்குச் செலுத்தப்பட வேண்டி உள்ளமையாலும் அந்தப் பிரிவிடம் எந்த நிதியும் சட்டப்பூர்வமற்றதானமையால் திணைக்களத்திற்கும் வங்கி நிதிப் பிரவிற்கும் இடையிலான கணக்குப் பதிவுகள் மூலம் மீதியைத் தீரப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.9 வங்கிக் கணக்குகள் பேணப்படல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வங்கிக் கணக்கொன்றில் 2024 திசெம்பர் 31 வரையில் வழங்கப்பட்டு 6 மாதங்களுக்கும் மேலாக பணம் செலுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்டிராத ரூபா 100,970 மதிப்புள்ள 21 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எழுத்துபூர்வ அறிவிப்பு வழங்கப்பட்டு, அதன் படி செலுத்துவதற்காக காசோலைகள் சமர்ப்பிக்கப்பட்டிராவிடின் நிதிப் பிரமாணம் 396 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருமானத்திற்கு வரவு வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக.	நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஆ)	சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் வங்கி நிதிப் பிரிவின் கீழ் 11 நடைமுறை கணக்குகளும் ஒரு சேமிப்புக் கணக்கும் பேணப்பட்டிருந்தது. இந்தக் கணக்குகளில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 48,111,167 மில்லியன் நிலவியது. நிதிப்பிரமாணம் 381 இன் பிரகாரம் இந்த நடைமுறைக் கணக்குகள் தொடர்பாக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வில்லை.	இந்தக் கணக்குகளுக்கு திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிராததுடன் ஒரு அதிகாரசபைக்குள் செயற்படும் அத்தகைய கணக்குகளுக்கு பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் தேவைப்பாடு இருக்கவில்லை. இது வரையில் செயற்படும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக மேலும் பேணப்பட வேண்டிய 06 அத்தியாவசிய கணக்குகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஏனைய 05 கணக்குகளை நிறுத்துவதற்கு (மூடுவதற்கு) முன்மொழியப்பட்டுள்ளது. மேலும் பேணப்பட வேண்டிய கணக்குகளுக்குத் தேவையான அங்கீகாரங்கள் எதிர்காலத்தில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	நிதிப் பிரமாணத்தின் படி திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயற்பாடு மேற்கொள்ளப்படாமை

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சமனல வாவி பயிற்சி மையத்தில் உரம் தயாரிக்கும் பகுதியை நிர்மாணிப்பதற்காக ரூபா 619,945 செலவிடப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் முதல் 2022 ஏப்ரல் வரை உற்பத்தி திறன் 5700 கிலோகிராம் ஆகும். இதில், 2021 திசெம்பர் மாதம் 500 கிலோகிராம் இந்த மையத்தின் காணியில் பயிரிடப்பட்ட தேயிலை சாகுபடிக்காக பெறப்பட்ட ஒதுக்கீட்டிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டு அந்த சாகுபடிக்குப் பயன்படுத்தப்பட்டது, இதனால் ரூபா 7,500 வருமானம் மட்டுமே கிடைக்கப்பெற்றிருந்தது. அதன்படி, மையத்தின் உரம் தயாரிக்கும் பகுதி மீளாய்வாண்டின் இறுதி	இந்த உரம் தயாரிக்கும் பகுதியை செயற்படுத்தி தேயிலை சாகுபடிக்காகப் பயன்படுத்தக் கூடிய விதம் குறித்த அறிக்கை ஒன்றை வழங்குமாறு பயிற்சி மற்றும் வாழ்வாதாரப் பிரிவிற்குப் பொறுப்பான நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையைப் பெற்றதை அடுத்து பிறகு இந்த உரம் தயாரிக்கும் பகுதி தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	சொத்துக்களை உயரிய அளவில் பயன்படுத்தி வருமானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

	வரையிலும் செயல்படாமல் இருந்தது.		
(ஆ)	சமுர்த்தி மற்றும் குறைந்த வருமானம் பெறும் 02 இலட்சம் குடும்பங் களை இலக்காகக் கொண்ட “முழுமையான வீட்டு குடியிருப்பு பொருளாதாரம்” திட்டத்தை செயற்படுத்துகையில் மாத்தறை பிரதேச செயலகப் பிரிவின் 11 கிராம அலுவலர் பிரிவுகளில் 20 பயனாளிகளின் செயற்திட்டங்கள் தோல்வியடைந்த போதிலும் அவர்களுக்கு அரசாங்கப் பங்களிப்பாக ரூபா 723,453 செலவில் அவர்களுக்கு வழங்கப்பட்ட உபகரணங்களின் பெறுமதி உடன்படிக்கைகளின் படி மீள அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிராததன் காரணமாக அரசாங்கச் செலவினம் விளைவற்ற செலவினமாகக் காணப்பட்டதுடன் அரசாங்கப் பங்களிப்பாக ரூபா 809,510 செலவை ஏற்று பயனடைந்த 23 பயனாளிகள் கணக்காய்வுத் திகதி வரை அஸ்வெசும மானியத்தைப் பெற்றுக்கொள்ளும் குடும்பங்களானமையால் அந்தக் குடும்பங்கள் “வலுவாக்கம்” செய்யப் பட்டிராமையால் இதற்காக செலவிடப்பட்ட பணமும் விளைவற்ற செலவினமாகியிருந்தது.	பதில் வழங்கப்படவில்லை.	உடன்படிக்கைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்ய வேண்டும்.
(இ)	சமுர்த்தி மற்றும் குறைந்த வருமானம் பெறும் 02 இலட்சம் குடும்பங்களை இலக்காகக் கொண்ட “முழுமையான வீட்டு குடியிருப்பு பொருளாதாரம்” நிகழ்ச்சித் திட்டத்தின் அக்குரஸ்ஸ பிரதேச செயலகப் பிரிவில் 7 பயனாளிகளுக்கு அரசாங்கப் பங்களிப்பாக ரூபா 188,412	பதில் வழங்கப்படவில்லை.	நிகழ்ச்சித்திட்டங்க முன்னேற்றத்தை மதிப்பாய்வு வேண்டும்.

தொகை செலவிடப்பட்டு வழங்கப்பட்டிருந்த உபகரணங்களும் வெலிகம பிரதேசச் செயலகப் பிரிவில் அரசாங்கப் பங்களிப்பாக ரூபா 1,003,388 செலவிடப்பட்டு 32 பயனாளி களுக்கு பகிர்ந்தளிக்கப் பட்டிருந்த உபகரணங்களும் விளைவற்றுக் காணப்படு வதற்கோ அல்லது சேதமாவதற்கு இடமளிக்கப் பட்டிருந்தமையால் அரசாங்கப் பணம் விளைவற்ற செலவினமாகியிருந்தது.		

4.2 எதிர்பார்க்கப்பட்ட விளைவு (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டில், திறைசேரி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 50 மில்லியனால் வலுவூட்டுவதற்காக ரூபா 43.40 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்தச் செலவில் ரூ. 20.59 மில்லியன் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு திட்டங்கள் மற்றும் பிற நடவடிக்கைகளுக்காகச் செலவிடப்பட்டிருந்தன. வலுப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்திற்காகச் செலவிடப் பட்டிருந்த ரூபா 22.52 மில்லியன் அதாவது மொத்தச் செலவினத்தில் 51 சதவீதம் மட்டுமேயாகும். திணைக்களத்தின் முக்கிய நோக்கான வறுமையை ஒழிப்பதும் சமூக நீதியை உறுதி செய்வதற்காக பொருளாதார ரீதியாக வலுப்படுத்தலான போதிலும் திணைக்களத்தின் மீண்டெழும் செலவினமாக சம்பளம் மற்றும் ஊதியக் கொடுப்பனவிற்காக ரூபா 20.51 பில்லியன் மீளாய்வாண்டின் போது செலவிடப் பட்டிருந்தது. இதன் படி திணைக்களத்தின் ஊழியர் கிரயம் திணைக்களத்தின் நோக்கங்களை அடைவதற்கு ஏற்படும் கிரயத்துடன் ஒப்பிடுகையில் மிகவும் உயர்வான தொகையைக் கொண்டிருந்தது.	2024 ஆம் ஆண்டில் அபிவிருத்தித் திட்டங்களுக் காக செலவிடப்பட்ட தொகை ரூபா 43.41 மில்லியன் தொகையானதுடன் இதில் அதிகாரிகளுக்கு அறிவூட்டல் மற்றும் பயிற்சி அளிப்பதற்காக செலவிடப் பட்ட தொகை ரூபா 4.48 மில்லியன் ஆகும்.	திணைக்களத்தின் முக்கிய நோக்கங்களை அடைவதற்கு நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்தல் வேண்டும்.

4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2024 இன் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் 47(4) ஆம் துணைப்பிரிவின் படி, வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு முடிவுற்று 180 நாட்கள் அல்லது அதற்கு முன்னர் வெளியிடப்பட வேண்டும். 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் படி, அரச நிதித் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல் இல 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள வடிவமைப்பின் படி வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் படி, இந்த செயலாற்றல் அறிக்கை வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் படியும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் படி, வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை அரச நிதித் திணைக்களத்தின் வழிகாட்டுதல் இல 14 இன் இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அத்தியாயங்கள் உள்ளடக்கப்பட்டு தயாரிக்கப் பட்டிருக்கவில்லை.	அரச நிதி வழிகாட்டுதல் இல. 14 இன் இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள படி தயாரிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கை பெப்ரவரி 28 ஆம் திகதி சமர்ப்பிப்பதில் நடைமுறைச் சிக்கல்கள் உள்ளதாக.	சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.4 சொத்து முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	திணைக்களத்தின் டிஃபென்டர் ஜீப், மிட்சுபிஷி பஜெரோ ஜீப் மற்றும் வேன் ஆகியவை தொழில்நுட்ப அதிகாரியின் பரிந்துரை மற்றும் முறையான அங்கீகாரம் இன்றி 2 தனியார் கராஜ்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும் கராஜிற்கு அனுப்பி வைக்கப்பட்ட திகதிகளும் போக்குவரத்துப்பிரிவிடம் இ ருக்கவில்லை. இந்த	அகற்றுவதற்கு 02 வாகனங்கள் அடையாளம் காணப்பட்டிருந்ததுடன் அதன்படி, அவற்றின் அகற்றுவதற்கு மதிப்பிடப்பட்டு தேவையான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.	சொத்துக்களை முறையாகப் பயன்படுத்த வேண்டியதுடன் அவற்றை செயலற்ற நிலையில் விடாமல் சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	வாகனங்கள் தொடர்பான கடைசியாக கோப்புகள் முறையே 2017, 2019 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் பராமரிக்கப்பட்டிருந்தன. அதன் படி, இந்த வாகனங்கள் 5 முதல் 7 ஆண்டுகளாக கேரேஜ்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதிலும், வாகனங்கள் குறித்து முறையான நடவடிக்கை எடுக்கப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.		
(ஆ)	சமனல வாவி பயிற்சி மையத்தில் பெரிய மிளகாய் சாகுபடிக்காக பயிற்சி மையத்தின் வளாகத்திற்குள் 800 சதுர அடி பரப்பளவில் பசுமை இல்லம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு அதற் கான மூலதனச் செலவினமாக 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 293,080 செலவிடப்பட்டிருந்த போதிலும் இது தற்போது விளைவற்றுக் காணப்பட்டது.	இந்த பசுமை இல்லத்தை ஏதேனும் ஒரு செயற்பணிக் காகப் பயன்படுத்தக் கூடிய விதம் குறித்த ஓர் அறிக்கையை வழங்குமாறு பயிற்சி மற்றும் வாழ்வாதாரப் பிரிவிற்குப் பொறுப்பான நிறைவேற்று அதிகாரி களுக்கு ஒப்படைக்கப் பட்டிருந்தது. குறித்த அறிக்கை பெறப்பட்டதை அடுத்து இந்த பசுமை இல்லம் தொடர்பாக மேலதிக நடவடிக்கை எடுக்கப்படுவதாக	சொத்துக்களை திறம்பட பயன்படுத்த வேண்டும்.
(இ)	திணைக்களத்தின் நிதிச் சுற்றறிக்கை 2024/04 இன் படி, பயிற்சி நிலையப் பொறுப்பதிகாரியால் பாரிய காணி உள்ள பயிற்சி நிலையத்தில் குறித்த காணியை மிக உயர் வருமானத்தை ஈட்டக் கூடிய வகையில் சாகுபடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு வேண்டும் என்றும் தற்போது தேயிலை மற்றும் சிறு ஏற்றுமதி பயிர்கள் பயிரிடப் பட்டுள்ள மையங்களில் பராமரிப்பு மற்றும் வருமான சேகரிப்பில் பாரிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் போதுமான வருமானத்தை ஈட்டுவதற்காக நடவடிக்கை எடுக்கப் படுவதற்கும் வருமானத்தைச் சேகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை பௌதீக மெய்மையாய்வின் போது	பயிற்சி மையங்களில் செயற்படுத்தப்படும் வருமானம் உருவாக்கும் செயற்திட்டங்கள் தொடர்பாக தலைமை அலுவலகத்தின் மேற்பார்வை போதுமானதாக இன்மை இந்த நிலைமைக்குத் தாக்கமளித்துள்ளமையை அடையாளம் காணப்பட்டதை அடுத்து அந்த நடவடிக்கைகளின் மேற்பார்வை தலைமை அலுவலகத்தின் வாழ்வாதாரப் பிரிவின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாக.	சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	அவதானிக்கப்பட்டது. நில்லம்பா பயிற்சி நிலையத்தில் உள்ள 21 ஏக்கர் காணியில், 2 ஏக்கர் மாத்திரமே பயிரிடப் பட்டிருந்ததுடன் 2023 ஆம் 2024 ஆம் ஆண்டுகளில் சாகுபடி வருமானமாகப் பெறப்பட்ட தொகை முறையே ரூபா 635,870 மற்றும் ரூபா 764,748 மாத்திரமேயாகும்.		
(ஈ)	பயிற்சி நிலையத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 2014 ஆம் ஆண்டு வங்கி ஊழியர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த 5 நெட்வொர்க் யூனிட்கள் (Network unit), 01 டிஃபென்டர் (Defender), 04 மொனிட்டர்கள் (Monitor), 01 வெப் கமரா (Web camera) ஆகியவை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விளைவற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.	இரத்தினபுரி மாவட்ட சமுர்த்தி அலுவலகம் அதன் தேவைகளுக்கு இந்த உபகரணங்களை தமக்கு வழங்குமாறு கோரியுள்ளமையால் அதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிலையப் பொறுப்பதிகாரிக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக.	சொத்துக்களை விளைவற்ற நிலையில் வைத்திராது ஆக்கபூர்வமான வகையில் பயன்படுத்த வேண்டும்.
(உ)	பொலன்னறுவை மாவட்ட சமுர்த்தி அலுவலகத்திற்குச் சொந்தமான ஒரு கப் வண்டி 2019 அக்டோபர் 2 ஆம் திகதி முதல் இயக்கு வதற்கு இயலாத நிலையில் செயலிழந்த நிலையில் துருப்பிடித்து இயற்கை அழிவுகளுக்கு உட்பட்டிருந்த துடன் இது தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வாகனத்தை சேவை யிலிருந்து நீக்கியுள்ள தாகவும் அப்புறப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக.	சொத்துக்கள் தொடர்பாக சரியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.5 நட்டங்களளும் இழப்புகளும்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிறுவனத்தின் லேண்ட் குரூஷர் வாகனத்தின் ஓட்டுநர் ஒருவரால், தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதியின்றி 2024 திசெம்பர் 30 அன்று எடுத்துச் செல்லப்பட்டு, அதுருகிரிய பகுதியில் உள்ள அதிவேக நெடுஞ்சாலையில்	2024 திசெம்பர் 30 ஆம் திகதி ஏற்பட்ட விபத்தில் ஏற்பட்ட இழப்பை குறித்த ஓட்டுநரிடமிருந்து வசூலிப் பதற்கு நிதிப் பிரமாணம் 104 இன் ஆய்வின் மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் படி, இழப்பை	இழப்பை அறவிட்டு வாகனப் பழுதுபார்ப்பு நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள வேண்டும்.

	விபத்துக்குள்ளாக்கப்பட்டிருந்தது. ஓட்டுனர் குடிபோதையில் விபத்து ஏற்பட்டதால், சம்பந்தப்பட்ட காப்புறுதி நிறுவனம் ரூபா 693,000 இழப்பை ஈடுசெய்ய முடியாது என்று தெரிவித்திருந்தது. திணைக் களத்தில் வாகனக் கட்டுப்பாடு தொடர்பான சரியான உள்ளகக் கட்டுப்பாடு முறை ஒன்று இன்மையால் இதுபோன்ற நிலைமை ஏற்பட்டதாக அவதானிக்கப்பட்டதுடன் குறித்த இழப்பை ஈடுசெய்வதற்கு கணக்காய்வுத் திகதி வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை.	மீட்டெடுப்பது குறித்து ஓட்டுநருக்கு எழுத்து மூலமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	
(ஆ)	2024 நவம்பர் 18 , அன்று நிறுவனத்தின் லேண்ட் குரூஷர் வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 (4) இன் கீழ் இழப்புகள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு, மாற்று மதிப்பு அல்லது பழுதுபார்க்கும் செலவாக ரூ. 55,000 மதிப்பிடப்பட்டதுடன் காப்புறுதி நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட அத் தொகை வசூலிக்கப் படாது இழப்புகள் மற்றும் தள்ளுபடிகள் அறிக்கையில் சேர்க்கப்பட்டிருந்தன.	2024 நவம்பர் 18, அன்று ஏற்பட்ட விபத்து தொடர்பாக பழுதுபார்ப்பிற்காக காப்புறுதி நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொகை ரூபா 55,000 ஆகும். இருப்பினும், அந்தத் தொகை இதுவரை அந் நிறுவனத்தால் வழங்கப்படவில்லை. அதனை விரைவாகப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுப்பதாக.	அங்கீகரிக்கப்பட்ட தொகையை விரைவாக வசூலிக்க வேண்டும்.

(இ)	அம்பாறை மாவட்ட அலுவலகத்திற்கு உரிய கப் வண்டி தொடர்பாக 2024 செப்தெம்பர் 26 ஆம் திகதி நேர்ந்த விபத்துத் தொடர்பாக குறித்த காப்புறுதி நிறுவனத்திடம் இருந்து காசோலை மூலம் ரூபா 209,300 தொகை கிடைக்கப்பெற்றிருந்ததுடன் அத் தொகை இழப்புகள் மற்றும் நட்டக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறே நிதிப் பிரமாணம் 104 (4) இன் பிரகாரம் இழப்புகள் குறித்து விசாரணை அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2024 சனவரி 26 ஆம் திகதி நேர்ந்த விபத்திற்கு உரித்தாக நிதிப் பிரமாணம் 104 (4) இன் பிரகாரம் இழப்புகள் குறித்துமேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கை தலைமை அலுவலகத்திற்கு வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.	இழப்புகள் மற்றும் நட்டங்கள் சரியாக அடையாளம் காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும்.
(ஈ)	நிறுவனத்தின் ஒரு கப் வண்டி 2024 ஜூலை 27 ஆம் திகதி மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரின் வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த போது விபத்திற்குட்பட்டிருந்ததுடன்இதற்காக குறித்த காப்புறுதிக் கம்பனியில் இருந்து ரூபா 72,889 காசோலை பெறப்பட்டதுடன் அவ்வாறு கிடைக்கப்பெற்ற தொகை இழப்புகள் மற்றும் கைவிடல்கள் தொடர்பான கூற்றில் பதிவு செய்யப்பட்டிருந்தது.	அவதானிப்புடன் உடன்படுவதாக	இழப்புகள் மற்றும் நட்டங்கள் சரியாக அடையாளம் காணப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு உள்ளடக்கப்பட வேண்டும்.
(உ)	மேலும், 2024 திசெம்பர் 20 ஆம் திகதி பணிப்பாளர் (நிர்வாகம்) அவர்களால் மேற்குறித்த வாகனத்தின் முன்பக்கக் கண்ணாடியைப் பழுதுபார்ப்பதற்கான பணம் கிடைக்கும் வரை, பழுதுபார்ப்புகளைச் செய்த நிறுவனத்தில் வாகனத்தை நிறுத்தி வைத்திருந்தமையால் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட தொகைக்கு மேலதிகமாக, பழுதுபார்ப்புகளைச் செய்த கராஜிற்கு ரூபா 111,163 செலுத்த வேண்டியதாக இருந்தது.	வாகனத்தின் முன்பக்க கண்ணாடியைப் பழுதுபார்ப்பதற்காக காப்புறுதி நிறுவனத்தினால் மொத்த பழுதுபார்ப்புச் செலவை வழங்கியிராமையால் நிறுவனத்தால் வாகனத்தைக் கொண்டு வருவதற்காக மிகுதித் தொகைக்கு உரித்தான ரூபா 111,163 கொடுப்பனவு உறுதிச்சான்று பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் இதற்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	இழப்புகள் மற்றும் நட்டங்கள் சரியாக அடையாளம் காணப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு உள்ளடக்கப்பட வேண்டும்.

(ஊ)	கப் வண்டி 2024 மே 16, அன்று, வாழ்வாதார மேம்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் கடமை முடிந்து வீட்டிற்குச் செல்கையில், வாகனத்தின் பிரேக்குகள் செயலிழந்தமையால் விபத்து ஏற்பட்டுள்ளது. இழப்பு மற்றும் நட்டப் பதிவேட்டில் மாற்று அல்லது பழுதுபார்ப்புச் செலவாக ரூபா 402,000 பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் நிதிப் பிரமாணம் 104(4) இன் கீழ் இறுதி அறிக்கையில் பழுதுபார்ப்புச் செலவாக ரூபா 309,190 மதிப்பிடப்பட்டிருந்தது. அதன்படி, இழப்பு மற்றும் நட்டப் பதிவேடு மற்றும் நிதிப் பிரமாணம் 104(4) அறிக்கையின் படி பழுதுபார்ப்புச் செலவில் ரூபா 92,810 தொகையான வேறுபாடு அவதானிக்கப் பட்டது. இது தொடர்பாக காப்புறுதியில் இருந்து அறவிடப்பட இயலாது போன நட்டம் ரூபா 77,610 ஆன போதிலும் நிதிக் கூற்றுகளில் நட்டங்கள் மற்றும் கைதவிர்ப்புகள் கூற்றில் ரூபா 402,000 ஆகக் கணக்கிடப்பட்டிருந்தது.	நிதிப் பிரமாணம் 104(4) இன் கீழ் இழப்புத் தொடர்பான இறுதி அறிக்கையில் பழுதுபார்ப்புச் செலவாகக் குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூபா 220,890 ஆக அல்லாது ரூபா 313,700 என சீராக்கப்பட வேண்டும் என நான் தயவுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேலும், அந்த இழப்பிற்கு மேலதிகமாக ரூபா 88,330 உள்ளது.பழுதுபார்ப்பிற்காக சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 313,700 தொகையான செலவின மதிப்பீட்டிற்காக ரூபா 220,890 தொகை காப்புறுதி நிறுவனத்தால் ஈடுசெய்யப்பட்டது. மேலும் பழுதுபார்ப்பிற்காக அனுப்பப் பட்ட நிறுவனத்திற்கு மேற்கண்ட தொகைக்கு மேலதிகமாக ரூபா 77,610 தொகை செலுத்தப்பட உள்ளது. இதன் படி இழப்பு மற்றும் சேதப் பதிவேட்டை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	விசாரணையை நடத்தும் அதிகாரிகள் நிதிப் பிரமாணம் 104(4) இன் படி அறிக்கையை சரியாகத் தயாரிக்க வேண்டும். மேலும் இழப்புகள் மற்றும் சேதங்களை சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களிற்கு உள்ளடக்க வேண்டும்.

4.6 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இயங்கும் நிலையில் இல்லாத 15 வாகனங்களுக்கு 2022/2023 மற்றும் 2023/2024 ஆம் ஆண்டுகளிற்காக ரூபா. 326,283 தொகை காப்புறுதித் தவணைப்பணம் செலுத்தப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டில் வாகனங்களை காபுறுதி செய்யும் போது இயங்கும் நிலையில் உள்ள வாகனங்கள் மட்டுமே காப்பறுதி செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக கூறப்பட்டுள்ளது.	சிக்கனமற்ற செலவுகளை மேற்கொள்ளலாகாததுடன் செலவினத்திற்காக அதிகாரமளித்தல், அங்கீகரித்தல், சான்றளித்தல் வழங்கும் அதிகாரிகள் நிதிப் பிரமாணத்தின் படி செயற்பட வேண்டும்.

(ஆ)	2023 ஆம் ஆண்டு திசெம்பர் முதல் அரசாங்கம் சமுர்த்தி மானியத் திட்டத்தை நிறுத்தி சமூக நலத்திட்டத்தால் அஸ்வெசும திட்டத்தை அறிமுகப்படுத்தியது. அதன் படி, 3 ஆண்டுகளுக்குள் 1.2 மில்லியன் அஸ்வேசும பயனாளிக் குடும்பங்களை பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும், மன ரீதியாகவும் வலுப்படுத்து வதற்கு திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. திணைக்களத்தால் அஸ்வசும திட்டத்திற்கு இணையாக அஸ்வேசும தரவு அமைப்பிலிருந்து வலுப்படுத்து வதற்கு இணையான மேலதிக தகவல்கள் சேகரிக்கப்பட்டு CRM தொகுதியைப் புதுப்பித்திருக்கவில்லை. எனினும், 2024 சனவரி முதல் மே மாதம் வரை ரூபா 1,430,004 தொகை திணைக்களச் செலவின விடயத்தின் மூலம் CRM தொகுதியைப் பேணு வதற்காகச் செலுத்தப் பட்டிருந்த தொகை விளைவற்ற செலவினம் என்பது அவதானிக்கப்பட்டது.	வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டம் நிச்சமற்றமையால் 2024 ஆம் ஆண்டில் CRM தொகுதிக்குள் காணப்பட்ட நலன் தரவுகள் புதுப்பிக்கப்பட்டிராததுடன் இதற்காக ரூபா 1,430,004 தொகை SLT கிலவுட் இற்காக CRM தொகுதி ஸ்தாபிக்கப்படுவதற்காக பெறப்பட்டிருந்த திறன்களுக்காக கொடுப்பனவுகள் செய்யப்பட்டதாக.	குறித்த செயற்பாடு களுக்கு அன்றி செலவினங்களை ஏற்கலாகாது.

4.7 முகாமைத்துவ நலிவுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2013 இன் 1 ஆம் இலக்க திவிநெகும கட்டளைச் சட்டத்தின் 36 ஆம் பிரிவின் கீழ் திவிநெகும அபிவிருத்தி நிதியம் நிறுவப்பட வேண்டும். மேலும் திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெறும் அனைத்து மானியங்கள், பரிசுகள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களிலிருந்தான பரிசுகள் மற்றும் பிற பங்களிப்புத் தொகைகள் மற்றும் வங்கிகளின் இலாபங்களிலிருந்து அமைச்சரால் நிர்ணயிக்கப்படும்	நிதி தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ளமையால், சட்டமா அதிபரால் வழங்கப்படும் ஆலோசனைகளைக் கருத்திற்கொண்டு இது தொடர்பாகவும் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக.	சட்ட ஏற்பாடுகளின் படி நிதியத்தை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	பணத்தொகையின் சதவீதமாக அனைத்துப் பெறுவனவுகளும் ஒன்றுதிரண்ட நிதிக்குச் செலவு வைக்கப்பட்டு அதன் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துடன் திவிநெகும அபிவிருத்தி நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் நிதியம் இது வரை நிறுவப்பட்டிருக்கவில்லை. திவிநெகும அபிவிருத்தி நிதியத்தை ஸ்தாபிப்பதற்கு திறைசேரிக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என 2021 மே 03 தெரிவிக்கப்பட்டிருந்தது.		
(ஆ)	கப் வண்டி ஒன்று 2020 மார்ச் 05 அன்று தொழில்நுட்பக் கோளாறு காரணமாக ஒரு தனியார் கராஜிற்கு அனுப்பப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியில் 4 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் வாகனப் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	வாகனத்தின் உதிரிப் பாகங்களில் உள்ள பற்றாக்குறை காரணமாக பழுதுபார்ப்புகளைப் பூர்த்தி செய்வதற்கு நீண்டகாலம் கடந்ததாக.	இத்தகைய நீண்ட காலம் எடுக்காது விரைவாக பழுதுபார்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
(இ)	நிறுவனத்தின் பிராடோ வாகனம் ஒன்று 2021 பெப்ரவரி 28 அன்று தொழில்நுட்பக் கோளாறிற்கு உட்பட்டு, 2021 மார்ச் 02 அன்று ஒரு தனியார் கராஜிற்கு அனுப்பப்பட்டது. 2022 மே 25, அன்று ரூபா 2,301,100 மதிப்பீட்டை கராஜ் சமர்ப்பித்திருந்தது. இருப்பினும், திணைக்களத்தின் தொடர்புடைய பொறுப்பதிகாரிகள் மதிப்பீட்டிற்கு பதிலளிக்காமையால், கராஜி லிருந்து இதுவரை செலவிடப்பட்டிருந்த ரூபா 63,500 தொகையும் 2022 மார்ச் 15 ஆம் திகதி முதல் திருப்பி அனுப்பும் திகதி வரை பாதுகாப்பான முறையில் வாகன நிறுத்தத்திற்கு ஒரு நாளைக்கு ரூபா 500 படி அறவிடப்படுவதாக கராஜினால் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, நிர்வாகத்தில் திறமையின்மை காரணமாக, திணைக்களத்திற்குப் பெரும் இழப்பை ஏற்பதற்கும் அரசாங்க வளங்கள் சேதமாவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.	வாகனத்தின் இயந்திர பழுதுபார்ப்பிற்காக அனுப்பி வைக்கப்பட்ட நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டின் படி, பழுதுபார்ப்பை மேற்கொள்வது பொருளாதார ரீதியாக பயனற்றமையால் அப்புறப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.	பழுதுபார்ப்பதற்காக பரிந்துரைக்கப்பட்டவுடன், உடனடியாக மேற்கொள்ளப்படுவதற்கோ அல்லது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஈ)	2022 ஆம் ஆண்டில் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி மானியங்களை செலுத்துவது தொடர்பாக CRM அமைப்பிலிருந்து தகவல்களைப் பெறுவதில் சிக்கல்கள் எழுந்த போதிலும், வீட்டு அதிஷ்ட இலாபச் சீட்டிழுப்பின் போது தகவல்கள் புதுப்பிக்கப்பட்டிராமை மற்றும் சமுர்த்தி பயனாளிகளின் திட்டங்கள் குறித்த தகவல்களைப் புதுப்பிக்காமை போன்ற சிக்கல்கள் இருந்தபோதிலும், மீண்டும் CRM தொகுதியை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்ததுடன் அவ்வாறு செய்ய வேண்டிய அவசியம் கேள்விக்குறியாக இருந்ததுடன் CRM அமைப்பின் மூலம் பெறப்பட்ட சமுர்த்தி பயனாளிகளின் தகவல்களை அஸ்வெசும தரவுத்தள அமைப்புடன் இணைக்க வாய்ப்பு உள்ளதா என்பதை ஆராயாது, ஒரு வருட காலத்திற்கு CRM அமைப்பைப் பராமரிப்பதற்கான தொழில்நுட்பக் குழுவின் மதிப்பீட்டுப் பரிந்துரை வழங்கல், கொள்முதல் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு ஒப்பந்தங்களில் கையெழுத்திடப் பட்டமையால் கொள்முதல் வழிகாட்டுதல்களின் 2.1.2 பிரிவின் படி கொள்முதல் செயல்முறை மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் எய்தப்படவில்லை.	12 மில்லியன் குடும்பங்களுக்கு வாழ்வாதாரமளிக்கும் பணி ஒதுக்கப்பட்டதன் மூலம், அந்தப் பணியை கணினி நிகழ்வின் உதவியின்றி மேற்கொள்ள முடியாமையால், அதற்காக உரிய புதுப்பிப்புகளைச் செயல்படுத்த ஒரு வருடத்திற்கு பராமரிப்பு மற்றும் சேவை ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளதாக.	திணைக்கள நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மட்டுமே கொள்முதல்கள் செய்யப்பட வேண்டும்.
(உ)	தேசவீரர்களுக்கான வீட்டுக் கடன் திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டு கடனைத் திருப்பிச் செலுத்தாமையால் அல்லது வேறு செயற்பாடொன்றால் சமுர்த்தி அதிகாரசபைக்கு ஏற்படும் எந்தவொரு இழப்பையும் அல்லது செலவையும் பகிர்ந்து கொள்ள ஒப்புக்கொண்டு, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் 2013 ஆம் ஆண்டில் ரூபா 100 மில்லியன் தொகையை இலங்கை சமுர்த்தி அதிகார சபைக்கு வழங்கியிருந்தது. அதன்படி,	வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு, பாதுகாப்புக் கடன்கள் தொடர்பாகவும் நிலுவையில் உள்ள கடன்களைக் கையாள்கையில் ஏதேனும் இழப்பு ஏற்பட்டால், அந்தத் தொகையை இரு தரப்பினரும் சமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும், பாதுகாப்பற்ற கடன்களை மீள அறவிடுவதற்கு திணைக்களம்	நிலுவையில் உள்ள கடன் நிலுவைத் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	சமுர்த்தி வங்கிகள் 11,929 தேசவீரர்களுக்கு ரூபா 3,547,133,064 தொகையை கடன்களாக வழங்கியிருந்தன. தேசவீரர்களுக்கான வீட்டுக் கடன் திட்டத்திற்காக சமுர்த்தி அதிகாரசபைக்கும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கும் இடையே 5 வருட காலத்திற்கு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் 2012 மார்ச் 07 அன்று கைச்சாத்திடப்பட்டதுடன் அது 2018 மார்ச் 06 ஆம் திகதி அன்று காலாவதியாகியது. புதிய புரிந்துணர்வு ஒப்பந்தம் விரைவாக கைச்சாத்திடப்பட்டு கடன் திட்டத்தை தொடர்ந்து செயற்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதி வரை இரு தரப்பினராலும் புதிய புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. அதன்படி, மேலும் அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 102,597,783 ஆகியிருந்தது.	நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வீட்டுக் கடன் விளம்பரத் திட்டங்களுக்காகச் செலவிடப்பட்ட பணத்தை இரு தரப்பினரும் சமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டதுடன் இதன் படி எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாகவும்.	
(ஊ)	மனிதவள முகாமைத்துவத் தொகுதி மூலம் திணைக்கள ஊழியர்களுக்கு உத்தியோக பூர்வ அடையாள அட்டைகளை வழங்குவதற்குத் தேவையான தகவல்களைச் சேகரிப்பு 22,944 எண்ணிக்கையான மொத்த ஊழியர்களில் 10,377 பேருக்கு மட்டுமே நடத்தப்பட்டிருந்தது. மேற்கண்ட பணிக்கான தகவல் சேகரிப்பு தலைமை அலுவலகத்திலும், கொழும்பு, குருநாகல் மற்றும் மொனராகலை ஆகிய 3 மாவட்டங்களிலும் குறைந்தபட்ச மட்டத்தில் காணப்பட்டன.	அனைத்து மாவட்டங்களுக்கும் அந்தப் பணிகளை திறம்படச் செய்வதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக.	தொகுதி மூலம் உத்தியோகபூர்வ அடையாள அட்டைகளை வழங்குவதற்குத் தேவையான பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும்.
(எ)	திணைக்களம் சார் உத்தியோகத்தர்களின் தனியாள் கோப்புகளில் மொத்தமுள்ள 22,944 கோப்புகளில் 4265 கோப்புகள் மாத்திரமே ஸ்கேன் செய்யப்பட்டு கணினியில் பதிவேற்றப்பட்டிருந்தன. குருநாகல் மற்றும் மொனராகலை மாவட்டங்களில் எந்த கோப்பும் பதிவேற்றப்பட்டிருக்கவில்லை.	அனைத்து மாவட்ட/பிராந்திய அலுவலகங்களும் 2025 மே 31 ஆம் திகதிக்கு முன்னர் கோப்புகளைப் பதிவேற்றும் பணியை நிறைவேற்ற வேண்டும் என அனைத்து மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக.	அனைத்து உத்தியோகத்தர்களின் தகவல்களும் கணனியில் உள்ளிடப்பட்டு, தொகுதி புதுப்பிக்கப்பட வேண்டும்.

(ஏ)	திணைக்கள உத்தியோகத்தர் களுக்கான ஓய்வூதியக் கோப்பு இந்த முறைமையின் மூலம் தயாரிக்கப்பட்டு குறித்த ஆண்டில் 60 வயது நிறைவடைந்து ஓய்வு பெறும் உத்தியோகத்தர்களின் தகவல்கள் அடங்கிய அறிக்கை முதற் பக்கத்தில் சேர்க்கப்பட்டு அது தலைமை அலுவலகத்தின் அனைத்து மாவட்ட சமுர்த்தி பிரிவுகள் மற்றும் தலைமையகங்களால் செயற்படுத்தப்படும் என்றும் கூறப்பட்டிருந்த போதிலும், சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி எந்த ஓய்வூதியக் கோப்பும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	ஸ்கேனர்கள் பற்றாக்குறை மற்றும் தனியாள் கோப்புகளில் உள்ள குறைபாடுகள் காரணமாக, உத்தியோகத்தர்களின் முழுமையான தனியாள் கோப்பு முறைமையில் தயாரிக்கப்படவில்லை. எனினும், கோப்புகளில் உள்ள குறைபாடுகள் சீராக்கப்பட்டு முழுமையான தனியாள் கோப்பை முறைமையில் உள்ளிடவும், 60 வயது நிறைவடைந்த பின் ஓய்வு பெறும் உத்தியோகத்தர்களின் தகவல்கள் அடங்கிய அறிக்கையை முதற் பக்கத்தில் சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என.	ஓய்வு பெறவிருக்கும் உத்தியோகத்தர்களின் தகவல்களை உள்ளிடுவதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.
(ஐ)	2025 பெப்ரவரி 27 இல் உள்ளவாறு சமுர்த்தி சமூக வங்கிகள் மற்றும் சங்கங்களின் இறுதிக் கணக்குகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வின் அபிப்பிராயம் தொடர்பான முன்னேற்ற அறிக்கையின் படி, 2015 முதல் 2022 வரையிலான 8 ஆண்டுகளுக்கான 9441 நிதிக்கூற்றுக்களில், 4347 இன் அபிப்பிராயம் மறுப்புத் தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் 784 நிதிக்கூற்றுக்களுக்கு மாத்திரமே உண்மையானதும் நியாயமானதுமான அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்எருந்தன. அதன்படி, சமுர்த்தி வங்கி முகாமையாளர்களால் அவ் வங்கிகள் முறையாக மேற்பார்வை செய்யப்பட்டு, விசாரணை அதிகாரிகளால் முறையாக விசாரிக்கப்பட்டு கணக்காய்வு உத்தியோகத்தர்களால் சமுர்த்தி வங்கிகளின் உள்ளகக் கட்டுப்பாட்டில் உள்ள பலவீனங்கள் கண்டறிந்து அவற்றைச் சீராக்குவதற்கும் நிதிக்கூற்றுக்களைத் துல்லியமாகத் தயாரிப்பதற்கும் வங்கி அமைப்பின் செயற்திறன் மற்றும் ஆக்கபூர்வத்தை அதிகரிப்பதற்கும் உரிய	மேற்பார்வை மற்றும் விசாரணை பிரிவுகளின் உத்தியோகத்தர்களின் விடயம் தொடர்பான அறிவை வளர்ப்பதன் மூலம் நேரும் குறைபாடுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக.	உள்ளகக் கணக்காய்வு போன்று புலனாய்வுத் துறையும், வங்கி முறைமையின் செயற்திறனுக்காக அதிகபட்ச பங்களிப்பை வழங்க வேண்டும். அத்துடன் வங்கிகள் மற்றும் சங்கங்களால் வழங்கப்படும் பரிந்துரைகளின் படி செயற்பட வேண்டும்.

பங்களிப்பு செலுத்தப்பட்டிருக்கவில்லை.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(ஓ)	2015 முதல் 2022 வரையான ஆண்டுகளின் சமூக வங்கிகளின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு செய்யப்பட்டு உண்மையானதும் நியாயமானதுமான அபிப்பிராயத்தை வெளியிடப்பட்ட 784 நிதிக்கூற்றுக்களில், 34 நிதிக்கூற்றுக்களின் அறவிடமுடியாக் கடன் விகிதம் அதிகரித்ததன் காரணமாக இலாப ஒதுக்கீட்டிற்கான அனுமதி வழங்கப்பட்டிராததுடன் 2025 பெப்ரவரி 27 ஆம் திகதியில் உள்ளவாறு நுண் நிதிப் பிரிவிற்குக் கிடைக்கப் பெற்ற கணக்காய்வு செய்யப்பட்ட 9441 நிதிக்கூற்றுக் களில் 2145 நிதிக்கூற்றுக் களுக்காக மாத்திரமே இலாப ஒதுக்கீட்டிற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக, 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பங்குதாரர் களுக்கு செலுத்த வேண்டிய ரூ. 9.71 பில்லியன் பங்கிலாபத்தைச் செலுத்த முடியாதிருந்தது.	பங்குதாரர்களின் வருடாந்தம் பங்கிலாபக் கொடுப்பனவு செலுத்தப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதுடன் அதன் காரணமாக பங்குதாரர்களுக்கு நட்டம் ஏற்படாத வகையில் அங்கீகரிக்கப்பட்ட பங்கிலாபம் இருப்பின் கூறப்பட்ட இடைக்காலப் பங்கிலாபத்தில் இருந்து செலுத்துவதற்கு அல்லது அவ்வாறில்லாத சந்தர்ப்பத்தின் போது 5% வட்டியைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.	பங்குதாரர்களின் வருடாந்த பங்கிலாபத் தொகையை குறித்த காலப்பகுதிகளில் பெறக்கூடிய வகையில் கழிக்கப்படுவதற்கும் துல்லியமான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

5. நல்லாளுகை

5.1 உள்ளகக் கணக்காய்வு

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2020/13 இன் 2020 செப்தெம்பர் 27 ஆம் திகதிய திணைக்களச் சுற்றறிக்கையின் மூலம், திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் வெளியகக் கணக்காய்வாளராகச் செயற்படும் வாய்ப்பு வழங்கப்பட்டது. அதன்படி, 2016, 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான வெளிப்புற கணக்காய்வை மேற்கொண்டமைக்காக திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு ஒரு	சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் வங்கி முகாமைத்துவ சபையால் 2020/75/05 ஆம் இலக்க வங்கி முகாமைத்துவ சபை தீர்மானத்திற்கு இணங்க வழங்கப்பட்டுள்ளதாக.	திவி நெகும சட்டத்தின்படி சமுர்த்தி வங்கி மற்றும் சங்கங்கள் திணைக்களக் கணக்காய்வின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளமை யால் கணக்காய்வு மேற்கொள்ளப்படுவதற்காக வங்கிகள் மற்றும் சங்கங்களிடமிருந்து அதற்காக பணம் அறவிடப்பட முடியாமையால் இவ்வாறு வழங்கப்பட்ட பணம் குறித்த உத்தியோகத்தர்களிடம்

	கணக்காய்வு அறிக்கைக்காக ரூபா 3,000 படி வங்கிகளுக்கும் 1007 வங்கிச் சங்கங்களுக்கும் குறித்த அறிக்கைகளின் கணக்காய்விற்காக ரூபா 12,885,672 தொகை வங்கி நிதிப் பிரிவால் செலுத்தப்பட்டிருந்தது. இதற்காக 2020 ஒக்டோபர் 15 ஆம் திகதிய 2020/75/05 ஆம் இலக்க சட்டவிரோதமான முகாமைத்துவச் சபை தீர்மானத்தின் படி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அது கணக்காய்வின் அடிப்படைக் கொள்கைகளுக்கு முரணானதாகவும் தாபனவிதிக் கோவைக்கு முரணானமையும் அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக முன்னைய ஆண்டின் போது கணக்காய்வில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		இருந்து மீள அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	2022 ஆம் ஆண்டிற்கான 1296 சமூக வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு செய்யப்பட்டு கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்று 2025 மார்ச் 30 ஆம் திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2023 ஆம் ஆண்டிற்கான சமுர்த்தி வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களின் வருடாந்த நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு ஒப்படைக்கப்படுவதற்கு தேசிய சபை அங்கீகரித்திருந்த போதிலும் திணைக்களத்தின் முகாமைத்துவ சபையால் தேசிய சபையின் தீர்மானம் இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.	2022 ஆம் ஆண்டிற்கான 159 கணக்காய்வு அறிக்கைகள் இதுவரையில் வெளியிடப்பட்டுள்ளதாகவும் மீதமுள்ள அறிக்கைகள் விரைவில் வெளியிடப்படும் நிலையில் உள்ளன எனவும் 2023, 2024 ஆம் ஆண்டுகளிலும் அதற்குப் பின்னரும் சமுர்த்தி சமூக நிதி வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு செய்யப்படுவதற்காக எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தின் படி கணக்காய்வு நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்படுவதற்கு வங்கி முகாமைத்துவ சபை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக.	உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் படி சட்டத்தின் படி ஒப்படைக்கப்பட்டுள்ள கணக்காய்வு குறித்த காலத்திற்குள் மேற்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6. மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	363 அதிகாரிகளால் தங்கள் நியமனங்களைப் பெறுவதற்காக தங்கள் தனியாள் கோப்புகளில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கல்விச் சான்றிதழ்கள் போலியானவை என உறுதி செய்யப் பட்டிருந்ததுடன் இவர்களில் 77 பேர் சேவையிலிருந்து நீக்கப்பட்டிருந்ததுடன் 20 பேர் சட்டத்தின்படி இழப்பீட்டைப் பெறும் உடன்பாட்டுடன் சேவையிலிருந்து இராஜினாமா செய்திருந்தனர். தெரிவுக் கணக்காய்விற்கு உட்படுத்தப் பட்ட பொலன்னறுவை மாவட்டத்தில் பணியாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடையே 13 பேரும் ஓய்வுபெற்ற 02 அதிகாரிகளும் போலி கல்விச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்து தங்கள் நியமனங்களைப் பெற்றுள்ளமை அவதானிக்கப் பட்டது. போலியான பெறுபேற்றுக் குறிப்புகளைத் தயாரித்து சமர்ப்பிப்பது 1968 இன் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். மேலும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் இரண்டாம் பகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் முதல் அட்டவணையின் கீழ் அரசாங்க அதிகாரிகளால் மேற்கொள்ளப்படக் கூடிய தவறுகள் தொடர்பான தவறை மேற்கொண்டுள்ளமையைக் கண்டறிந்திருந்த போதிலும் இதற்கு எதிராக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	போலி ஆவணங்களைச் சமர்ப்பித்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக ஒரு குழு நியமிக்கப் பட்டுள்ளதுடன் அந்தக் குழுவின் பரிந்துரைகளைப் பெற்றதை அடுத்து மேலதிக நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதி மற்றும் தாபன விதிக் கோவையின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஆ)	அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 14 ஆம் திகதிய 2370/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் II ஆம் அத்தியாயத்தின் 14 ஆம் பிரிவின் படி ஒப்படைக்கப்பட்ட அதிகாரம் கொண்ட அதிகாரியினால் மாத்திரமே அவ் ஒப்படைக்கப்பட்ட அதிகாரம் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் மாவட்டங்களுக்குள் உள்ள இடமாற்றங்கள் திணைக்களத் தலைவரின் அங்கீகாரத்தின் கீழ் அல்லாது மாவட்ட மற்றும் பிராந்திய இடமாற்ற சபைக்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதன் படி, மேற்குறித்த வர்த்தமானி அறிவித்தலின் XVIII ஆம் அத்தியாயத்தின் 255 ஆம் பிரிவின் படி வருடாந்த இடமாற்றக் குழுவின் முன்மொழிவுகள், வருடாந்த இடமாற்ற உத்தரவுகள், வருடாந்த இடமாற்ற உத்தரவுகள் மீளாய்வுக் குழுவின் பரிந்துரைகள் கருத்திற் கொள்ளப்பட்டு வருடாந்த இடமாற்ற உத்தரவுகள் வெளியிடப்படுவதற்கான அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரம் கொண்ட அதிகாரியால் செயற்படுத்தப்பட வேண்டிய போதிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இது வரையில் திணைக்கள ஊழியர்களுக்கான மூப்புப் பதிவேட்டைத் தயாரிக்கும் பணி இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக.	அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் ஒவ்வொரு பிரிவிலும் இணைக்கப்பட்ட அதிகாரிகள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள், பிராந்திய அலுவலகங்களில் இணைக்கப்பட்ட அதிகாரிகளின் சேவைக் காலம் 20 வருடங்களுக்கு மேலான ஒரே பிரிவில் ஈடுபட்டிருந்த 145 அதிகாரிகள் அவதானிக்கப்பட்டதுடன் 06 முதல் 10 ஆண்டுகள் வரை 382 அதிகாரிகள் அவதானிக்கப்பட்டனர். இவ்வாறு நீண்ட காலமாக அதிகாரிகளை இடமாற்றம் செய்யப்படாமையால்	ஒரே பணியிடத்தில் 05 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றிய அதிகாரிகளை இடமாற்றம் செய்யும் படி அனைத்து மாவட்ட செயலாளர்கள்/பிராந்திய செயலாளர்கள் மற்றும் திணைக்களத்தின் அனைத்துப் பிரிவுத் தலைவர்களுக்கும் சுற்றறிக்கைகள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக.	பொது நிர்வாக சுற்றறிக்கை 18/2001 இன் படி இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

	அதிகாரி களின் தொழில்முறை மேம்பாடு, திறன்களை மேம்படுத்துதல், அனுபவத் தைப் பெறுதல், நிறுவனத்தின் செயல்திறன் மற்றும் ஆக்கத்திறனை மேம்படுத்து தல் உள்ளிட்ட நோக்கங் களை திணைக்களத்தால் அடைய முடியாது போயுள்ளதுடன் இடமாற்றம் செய்யப்படாது நீண்ட காலம் ஒரே சேவை இடத்தில்/ களத்தில் பணியாற்றுவதன் மூலம், நிதி மோசடி உள்ளிட்ட பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட வாய்ப்பு உள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.		
(ஈ)	கம்பஹா, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய 3 மாவட்டங்களிலும் பதில் கடமைகளுக்காக 940 அதிகாரிகள் நியமிக்கப் பட்டிருந்தனர், மேலும் அந்த அதிகாரிகளுக்கு பதில் கடமைகள் மற்றும் பொறுப்பு கடமைகளுக்கான கொடுப்பனவுகளும் வழங்கப் பட்டிருந்தன. மாவட்டங்களில் பதில் நியமனங்கள், பணிப்பாளர் நாயகத்தின் மேவுகை அங்கீகாரத்திற்கு உட்பட்டு மாவட்ட சமுர்த்தி மேலதிகப் பணிப்பாளர் நாயகத்தால் மேற்கொள்ளப் பட்டிருந்தன. திணைக்களத் துடன் இணைக்கப்பட்டுள்ள அதிகாரிகளின் நியமன அதிகாரம் பணிப்பாளர் நாயகம் என்பதாலும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்துவது தலைமை அலுவலகத்தால் செய்யப்படுவதாலும், தலைமை அலுவலகம் பதில் கடமை நியமனங்களை வழங்குவது குறித்த தகவல்கள் புதுப்பித்த நிலையில் பேணப்பட வேண்டிய போதிலும் இது தொடர்பாக எந்தத் தகவலும் பராமரிக்கப்பட்டிராததுடன் குறித்த நிரந்தர நியமனங்களைச் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.	பதில் கடமைகளுக்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் தொடர்பான தகவல்கள் மாவட்ட மட்டத்தில் தயாரிக்கப்பட்டுள்ளதாக.	தாபன விதிக்கோவையின் படி நியமனங்கள் சரியாக வழங்கப்பட வேண்டும்.